ஸ்ரீ:

# பாகவதர்களின் பெருமை

(ஸ்ரீ. உ.ப. வித்வான் ப. ராமானுஜாசார்யர், பெங்களூர்)

ஸ்ரீமத் வேதமார்க்கேத்யாதி பிருதாலங்க்ருதராய், ஆஸேதுஹிமாசலம் ப்ரஸித்தராய், ஜ்ஞான, அனுஷ்டான, வைராக்ய நிதியாய் எழுந்தருளியிருந்த ஸ்ரீவண்ஶடகோப ஸ்ரீவீரராகவ ஶடகோப யதீந்த்ர மஹாதேஶிகனுடைய ஶதமான மஹோத்ஸவத்தில் 'गङ्गासङ्गेन नैर्मल्यं रथ्याद्भिर्लभ्यते यदि । वाचो विशुद्धिसिद्ध्यर्थं सङ्गम्यन्ते गुरोर्गिरः ॥' என்கிற ரீதியில் அடியேனுடைய நாவினைப் புனிதமாக்கிக் கொள்ள ஓரிரு விஷயங்களை விஜ்ஞாபித்துக் கொள்கிறேன்.

அடியேனுடைய தௌர்ப்பாக்கியத்தினால் ஸ்ரீமதித்யாதி ஸ்ரீதேவனார்விளாகம் அழகியசிங்கரை விபவதஶையில் ஸேவிக்கப் பெறாவிடினும், 'सेवे यतीन्द्रं सकलगुणनिधिम्' என்ற தனியனின்படி பெருமை வாய்ந்த அம்மஹானுடைய குணாதிஶயங்களைப் பலபேரிடமிருந்து கேட்கப்பெற்றதையே பெரும் பாக்கியமாகக் கருதி, ஆஸ்திக தர்ஶனங்களில் பல விஷயங்கள் ஶ்ரவணத்தில் ஆரம்பித்து தர்ஶன (ஸமானாகார) தஶைக்கு கோசரமாவது போல் 'त्रय्यन्तप्रतिनन्दनीयविविधोदन्ताः' என்று ஆசார்யஸார்வபௌமன் ஸாதித்தபடி ஸ்ரீமதழகியசிங்கர் விஷயத்தில் சாபலத்தினால் ஸத்குணானுபவம் பண்ண இழிகிறேன்.

வேதத்தில் பாதவதர்களின் பெருமையை வெகுவாகக் கொண்டாடி இருக்கிறது. ஸத்துக்கள் என்கிற சொல்லை அவர்கள் விஷயத்தில் வழங்கி உள்ளது. 'अस्ति ब्रह्मेति चेद्वेद । सन्तमेनं ततो विदुः' என்றும், 'ऋचः सामानि यजूꣳषि । सा हि श्रीरमृता सताम् ।' என்றும், 'त्वꣳ ह्यग्ने अग्निना विप्रो विप्रेण सन् सता । सखा सख्या समिध्यसे' என்றும், 'त्वमग्न इन्द्रो वृषभः सतामसि त्वं विष्णुरुरुगायो नमस्यः' என்றும், 'सतां ज्येष्ठतमाय .... अवसे हवामहे' என்றும், 'मर्तासः सन्तो अमृतत्वमानशुः' என்றும், 'सन्तः अवद्यानि पुनानाः' என்றும் பலவிடங்களில் பலவாறு கூறியுள்ளதால் பகவத்விஷயத்திலேயே ப்ரவணர்களான ஸத்துக்களை எப்போதும் நினைத்து, வாழ்த்தி, வணங்குதல் உயர்ந்த மேன்மையைப் பயக்கும். ப்ராஹ்மணன், பகவான், ஸாது, கவி, விப்ரர், தீரர், தேவர், ஸாத்யர், ரிஷிகள், ஸூரிகள் முதலிய சொற்களும் இப்பொருளில் வழங்கப்பட்டுள்ளன. 'नावेदविन्मनुते तं बृहन्तम् । सर्वानुभुमात्मानꣳ संपराये । एष नित्यो महिमा ब्राह्मणस्य । न कर्मणा वर्धते नो कनीयान् । तस्यैवात्मा पदवित् तं विदित्वा । न कर्मणा लिप्यते पापकेन', 'ब्राह्मणाः भगवन्त', 'महाशालाः महाश्रोत्रियाः', 'तं धीरासः कवय उन्नयन्ति । स्वाधियो मनसा देवयन्तः', 'अजायमानो बहुधा विजायते । तस्य धीराः परिजानन्ति योनिम्', 'तद्विष्णोः परमं पदꣳ सदा पश्यन्ति सूरयः', 'तद्विप्रासो विपन्यवो जागृवांसः समिन्धते', 'ते ह नाकं महिमानः सचन्ते । यत्र पूर्वे साध्याः सन्ति देवाः' முதலியன கவனிக்கத் தகுந்தன.

பாகவதர்களின் நடைமுறையைப் பின்பற்ற வேண்டும் என்பது 'ये केचास्मच्छ्रेयाꣳसो ब्राह्मणाः । तेषां त्वयाऽऽसनेन प्रश्वसितव्यम्' என்றும், 'अथाभ्याख्यातेषु । अथ यदि ते कर्मविचिकित्सा वा वृत्तविचिकित्सा वा स्यात् । ये तत्र ब्राह्मणाः सम्मर्शिनः । युक्ता आयुक्ताः । अलूक्षा धर्मकामाः स्युः । यथा ते तत्र/तेषु वर्तेरन् । तथा तत्र/तेषु वर्तेथाः' என்று குருகுலத்தில் க்ரமமாக வேதாத்யயனம் பண்ணினவனுக்கும் தர்மத்திலோ ஆசாரத்திலோ ஸந்தேஹம் ஏற்பட்டால் மேற்கூறிய பாகவதர்களின் நியமனமும் ஆசாரமும் தான் நிஷ்கர்ஷகமான ப்ரமாணம் என்று அறுதியிட்டுள்ளதால் அறியலாம்.

வேதம் 'नम ऋषिभ्यो मन्त्रकृद्भ्यो मन्त्रपतिभ्यः, मा मामृषयो मन्त्रकृतो मन्त्रपतयः परा दुः, माऽहमृषीन् मन्त्रकृतो मन्त्रपतीन् परा दाम्' (இங்கு ரஹஸ்யத்ரயம் மந்த்ரஶப்தவாச்யம் ஆகக் கடவது), 'यावतीर्वै देवताः ताः सर्वा वेदविदि ब्राह्मणे वसन्ति, तस्मात् ब्राह्मणेभ्यो वेदविद्भ्यो दिवेदिवे नमस्कुर्यात्' என்று பாகவதோத்தமர்களை

அன்றாடம் வணங்குவதை விதித்தது. பாகவதாபசாரம் மிகக் கொடியது என்பதையும் 'यान्यस्माक॰ सुचरितानि । तानि त्वयोपास्यानि । नो इतराणि' என்றும், 'नाश्लीलं कीर्तयेत्, एता एव देवताः प्रीणाति' என்றும், 'यत्किञ्चेदं वरुण दैव्ये जनेऽभिद्रोहं मनुष्याः चरामसि । अचित्ती यत्तव धर्मा युयोपिम मा नः तस्मात् एनसो देव रीरिषः ॥' என்றும், பாகவதர்கள் போனகம் செய்த சேடம் தருவரேல் புனிதமாம் என்பதாலும் அவர்களின் பெருமை அளவிடமுடியாததென்று தெரிகிறது. ஶ்ருதியும் 'अदितिः पुत्रकामा । साध्येभ्यो देवेभ्यो ब्रह्मौदनमपचत् । तस्या उच्छेषणम् अददुः । तत् प्राश्नात् । सा रेतोऽधत्त । तस्यै चत्वार आदित्या अजायन्त ।' அதிதி என்பவள் பிள்ளைகளை அடைய விரும்பி ப்ரஹ்மௌதனம் என்ற உயர்ந்த உணவை ஸாத்ய தேவர்களுக்குப் படைத்து அவர்கள் உண்டதன் மீதியை உட்கொண்டதால் நான்கு சிறந்த பிள்ளைகளைப் பெற்றாள். 'साऽमन्यत । उच्छेषणान्मे इमेऽज्ञत । यदग्रे प्राशिष्यामि । इतो मे वसीया॰सो जनिष्यन्त इति । साऽग्रे प्राश्नात् । सा रेतोऽधत्त । तस्यै व्यृद्धमाण्डम् अजायत ।' பிறகு அவர்கள் மீதியை (எச்சிலை) உண்டதால் பிறந்தவர்களைக் காட்டிலும் முன்னமே உண்டால் இன்னும் சிறந்த பிள்ளைகள் பிறக்கக்கூடும் என்று எண்ணி இரண்டாவது முறை உணவைப் படைத்துத் தானே முதலில் உண்டாள். அப்பொழுது கருத்தரித்து அது கலைந்துவிட்டது. 'सा आदित्येभ्यो एव तृतीयमपचत् भोगाय म इद॰ श्रान्तमस्त्विति । तेऽब्रुवन् वरं वृणामहै योऽतो जायाता अस्माक॰ स एकोऽसत् । योऽस्य प्रजायामृध्याता अस्माकं भोगाय भवादिति । ततो विवस्वान् आदित्योऽजायत ।' பின்னர் தன் தவற்றை உணர்ந்து மூன்றாவது முறை தேவர்களுக்குப் படைத்து மீதியையே உண்டு ஸூர்யனைப் பெற்றெடுத்தாள் என்று தெரிவிக்கிறது. 'उच्छेषणेन जुहोति । उच्छेषणाद्वा अदिती रेतोऽधत्त' என்று விதிக்கிறது.

குருபரம்பராஸாரத்தில் ஸ்வாமி தேஶிகன் 'न म्लेच्छाशुच्यसद्भिः सह सम्भाषेत । सम्भाष्य पुण्यकृतो मनसा ध्यायेत्' என்கிற இடத்தில் ஸாதாரணமான புண்யக்ருத் என்ற சொல் இங்கு ஆசார்யர்களைக் குறிக்கும் என்றும் அவர்களை நினைப்பது நித்யம், நைமித்திகம், காம்யம் என்ற மூவகையிலும் சேரும் என்றருளியுள்ளார். இது வேதத்தில் 'सुकृतां वा एतानि ज्योतीँषि यन्नक्षत्राणि ।', 'इमौ ते पक्षावजरौ पतत्रिणो याभ्या॰ रक्षा॰स्यपह॰स्यग्ने । ताभ्यां पतेम सुकृतासु लोकं यत्र ऋषयः प्रथमजा ये पुराणाः' என்கிற இடங்களில் தெளிவிக்கப்பட்டது.

ஸ்ரீமதழகியசிங்கரின் திவ்யசரிதத்தைப் பார்க்கும்போது ஶ்ருதியில் சொன்ன மாநுஷானந்தமும் (பூர்வாஶ்ரமத்தில்) ப்ரஹ்மானந்தமும் இப்பிறப்பிலேயே அடைந்தமை தெரிய வரும். 'युवा स्यात् साधु युवाऽध्यायकः । आशिष्ठो दृढिष्ठो बलिष्ठः । तस्येयं पृथिवी सर्वा वित्तस्य पूर्णा स्यात् । स एको मानुष आनन्दः।' என்று முதலியதும் 'ते ये शतं प्रजापतेरानन्दाः । स एको ब्रह्मण आनन्दः । श्रोत्रियस्य चाकामहतस्य ।' என்று இரண்டாவதும் விளக்கப்பட்டுள்ளன. முன்னதில் பற்றற்று இருந்தமையும் 'तेन त्यक्तेन भुञ्जीथाः' என்ற உபநிஷத் வாக்யத்தை ஒட்டியேயாம். 'तस्मात् श्रेया'सं पापीयान्पश्चात् अन्वेति ।', 'यद्यदाचरति श्रेष्ठः' என்கிற நிலை இரண்டாஶ்ரமத்திலும்.

திருமேனி பாங்கில்லாத நிலையிலும் ஸ்ரீமதழகியசிங்கர் ஆசாரத்தைச் சிறிதும் தளர்த்திக் கொள்ள-வில்லை மற்றும் மருந்துகளை உட்கொள்ளவில்லை என்று கேட்டபோது 'अटति यद्यतिः नैमिशं वनं नलिनसुन्दरं नाथ तद्वपुः। हिमरुजादिभिः सीदतीति नः कलिलतां मनः कान्त गच्छति ॥' என்ற அனுபவம் தான் உண்டாகிறது, மஹாபாகவதனான ப்ரஹ்லாதாழ்வானின் 'तत्साधु मन्येऽसुरवर्य देहिनाम् .... वनं गतो यद्धरिमाश्रयेत' என்ற உபதேஶம் நைமிஶாரண்யத்தில் ந்ருஸிம்ஹனை தானுடைக் குரம்பைப் பிரியும்போது உன்தன் சரணமே சரணமென்று அடைந்த் ஸ்ரீமதழகியசிங்கரின் நடைமுறையில் வெளிப்பட்டது. திருமங்கை ஆழ்வார் விரும்பியும் அடையாத பேறு இது.

ஸ்வாமி தேஶிகன் ஸச்சரித்ரரக்ஷையில் 'विष्णुना अत्तमश्नन्ति, विष्णुना पीतं पिबन्ति, विष्णुना घ्रातं जिघ्रन्ति, विष्णुरसितं रसयन्ति, तस्मात् विद्वांसः विष्णूपहृतं भक्षयेयुः' என்று உதாஹரித்த மஹோபநிஷத் ஶ்ருதியின்படி

*பகவானுக்கு நிவேதனம் செய்ததையே பரமைகாந்திகள் உட்கொள்ள வேண்டும் என்றதும், ' .. உடுத்துக் கலத்ததுண்டு' என்றதும் கூட திருமேனி அஶக்தியில் மருந்து முதலியது உட்கொள்வதை நிஷேதிக்குமா என்றும்* 'सर्वत्रानुमतिश्च प्राणात्यये तद्दर्शनात्' *முதலியனவற்றை எப்பொழுது செயற்படுத்தலாம் என்பதிலும் ஐயம் விளைகிறது. ஒருக்கால்* 'धर्मान्नाति दुश्चरं तस्माद्धर्मे रमन्ते', 'धर्मान्न प्रमदितव्यम्' 'चरैवेति चरैवेति चरन् वै विन्दते मधुम्', 'कुर्वन्नेवेह कर्माणि जिजीविषेच्छत॰ समाः', 'सन्न्यासयोगात् यतयः शुद्धसत्वाः', 'तस्मात् शुश्रूषुः पुत्राणा॰ हृद्यतमः । नेदिष्ठो हृद्यतमः । नेदिष्ठो ब्रह्मणो भवति', 'मनीषी वैदिकाचारं मनसापि न लङ्घयेत्' *முதலியவற்றை ஶ்ரமதஶையிலும் (ஆபத்திலும்)* अन्ययोगव्यवच्छेद-प्रधान*மாக்கினாரோ என்றெண்ண வைக்கிறது.*

*மாலோலனை பதரிகாஶ்ரமம் வரையில் பக்தி ஶ்ரத்தையுடன் மிகக் கஷ்டமான நிலையில் ஸஞ்சாரமாக எழுந்தருளப் பண்ணிக் கொண்டு நாதனை நரசிங்கனை நவின்றேத்துவார்கள் உழக்கிய பாததூளி படுதலால் இவ்வுலகத்துக்குப் பாக்கியம் பலிக்கச் செய்த ஸ்ரீமதழகியசிங்கரின்* 'तीर्थीकुर्वन्ति तीर्थानि स्वान्तस्थेन गदाभृता', 'हृदयेन उद्वहन् हरिम्' *என்றெல்லாம் வியக்கத்தக்க சரிதம்* परमपावन*மானது. அவருடைய ப்ரபாவத்தாலும் இதானீம் ஸ்ரீமதழகியசிங்கருடைய அனுக்ரஹவிஶேஷத்தாலும் அடியேனுக்கு நைமிஶாரண்ய க்ஷேத்ரயாத்ரை கிடைத்தது பெறும் பேறாகும்.*

*அடியேனுக்கு திருத்தமையனார் தேவனார்விளாகம் ஸ்ரீமதழகியசிங்கரிடம் ஸமாஶ்ரயணம் பெற்றவர். அவரை ஸ்ரீமதழகியசிங்கர் திவ்யப்ரபந்தத்தில் பரீக்ஷித்து,*

*'பிரியாதாட்செய் என்று பிறப்பறுத்து ஆளறக் கொண்டான்,*
*அரியாகி இரணியனை ஆகம் கீண்டான் அன்று,*
*பெரியார்க்கு ஆட்பட்டக்கால் பெறாத பயன் பெறுமாறு,*
*வரிவாள்வாயரவணைமேல் வாட்டாற்றான் காட்டினனே'*

*என்ற ஆழ்வார் ஸ்ரீஸூக்தியைத் திருச்செவி சாய்த்துப் போர உகந்து அனுக்ரஹித்த இரண்டு ரூபாய் நாணயத்தை இன்றளவும் காத்து வருகிறார்.*

वीरराघवयोगीन्द्रशतमानमहोत्सवे । तद्गुणानन्वभूद्भक्त्या वात्स्यरामानुजः कृती ॥

शुभमस्तु ॥